**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

D.W.–9

O.S.No.250/2017

2025 ம் ஆண்டு ஜூன் மாதம் 04 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.கே.ஆர். கண்ணன், பி.ஏ., பி.எல்., கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர் அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு. வெற்றிசெல்வன் | வயது: 42 |
| த/பெ. : திரு. சொந்தர்ராஜன் | முகவரி: |
| தொழில் : | |

**முதல் விசாரணை :**

2 ம் வாதி ஆஜர். 2 ம் பிரதிவாதி ஆஜர். வாதி பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சம்மன் வந்தன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். நான் 2010 ம் வருடத்தில் இருந்து 3 ம் பிரதிவாதி அலுவலகத்தில் மிஷின் ஆப்ரேட்டராக வேலை பார்த்து வந்தேன். எந்த மாதம் என்று ஞாபகம் இல்லை. அந்த சமயத்தில் 2 மிஷின்கள் இருந்தது. ஒவ்வொரு மிஷினுக்கும் ஒவ்வொரு ஆப்ரேட்டர்கள் இருந்தார்கள். இன்னொரு மிஷின் ஆப்ரேட்டர் யார் என்று ஞாபகம் இல்லை. 3 ம்பிரதிவாதி நிறுவனத்தின் supervisor கொடுக்கும் program ன் படி பணி செய்வேன். 2010 ம் வருடம் லோகநாதன் program விவரங்களை கொடுப்பார். லோகநாதன் 3 ம் பிரதிவாதி நிறுவனத்தின் MD ஆக இருந்தார். கோவிந்தராஜனும் program கொடுப்பார். அதன் படியே அவர்கள் கொடுத்த அளவுகளின் படி நான் பனியன் தயாரிப்பேன். அதில் கட்டிங் வேஸ்ட் எல்லாம் வரும். நான் 2024 மார்ச் 20 வரைக்கும் மிஷின் ஆப்ரேட்டராக மேல் சொன்ன நிறுவனத்தில் பணியாற்றி வந்தேன். மார்ச் 2024 வரைக்கும் இந்த வழக்கின் 3 ம் பிரதிவாதி நிறுவனத்தில் மிஷின் ஆப்ரேட்டராக வேலை செய்ததற்கான மாத ஊதியத்தை பெற்றுவந்தேன். மேற்படி நிறுவனத்தில் வேலை குறைவானதாலும் எனக்கு சம்பளம் போதுமானதாக இல்லததாலும் நான் வேலையை விட்டு நின்றுவிட்டேன்.

**குறுக்கு விசாரணை**

1,2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் அஜராகியிருந்து குறுக்கு விசாரணை செய்யவில்லை.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.06.04 17:36:08 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.

**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

D.W.–10

O.S.No.250/2017

2025 ம் ஆண்டு ஜுன் மாதம் 04 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.கே.ஆர். கண்ணன், பி.ஏ., பி.எல்., கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர் அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு. கார்த்திகேயன் | வயது: 68 |
| த/பெ. : திரு. பழனிசாமி | முகவரி: |
| தொழில் : | |

**முதல் விசாரணை :**

2 ம் வாதி ஆஜர். 2 ம் பிரதிவாதி ஆஜர். வாதி பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சம்மன் வந்தன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். நான் ஆடிட்டராக பணிபுரிகிறேன். சாட்சி சம்மனில் 3 ம் பிரதிவாதி நிறுவனத்திற்குரிய வருமானவரி செலுத்திய விவரங்களை தாக்கல் செய்யும்படி உத்தரவு விடப்பட்டுள்ளது. நான் தற்சமயம் retired ஆகிவிட்டேன். அந்த விவரங்கள் என்னிடம் இல்லை. அதை பற்றி ஞாபகம் இல்லை. 3 ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு 2013– 2014 வருடத்திற்குரிய வருமான வரி விவரங்களை நான் தயார் செய்து கொடுத்திருந்தேன். வருமான வரி விவரங்கள் தாக்கல் செய்த போது அதன் நகல் ஒன்று நான் வைத்தேன். அதை நான் கோவிந்தராஜிடம் கொடுத்துவிட்டேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான் நான் தயார் செய்த 2013 – 2014 வருடத்திற்குரிய வருமான வரி விவரங்கள் ஆகும். அந்த வருமான வரி விவரங்கள் திருப்பூர் வருமான வரி அலுவலகத்தில் தாக்கல் செய்தேன்(ITO–2). அந்த விவரங்கள் ஆன்லைனில் தாக்கல் செய்தேன். அந்த ஆவணத்தில் 6 ம் பக்கத்தில் பங்குதாரர்களுக்கு சம்மளமாக ரேணுகாதேவிக்கும், கஸ்தூரிக்கும் ரூ.1,20,000/– கொடுத்தாக சொல்லப்பட்டுள்ளது. அதற்கு ஆவணங்கள் கொடுத்தார்கள். அதன் அடிப்படையில் சொன்னேன். 2 ம் பிரதிவாதி ஆவணங்கள் கொடுத்த வகையில் தான் செலவு விவரங்கள் வருமான வரி விவரங்களில் குறிப்பிடப்பட்டது. 2013 –2014 ம் ஆண்டு 3 ம் பிரதிவாதி நிறுவனத்திற்காக தாக்கல் செய்யப்பட்ட வருமான வரி

விவரங்கள். அது **வா.சா.ஆ– 25** ஆகும். அதில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் 2ம் பிரதிவாதி கொடுத்த ஆவணங்களின் அடிப்படையில் தயார் செய்து தாக்கல் செய்தேன். எந்த வருடம் வரி வருமான வரி விவரங்கள் 3ம் பிரதிவாதி நிறுவனத்திறக்காக தாக்கல் செய்தேன் என்பது ஞாபகம் இல்லை. வருமான வரி விவரங்கள் தாக்கல் செய்யும்போது voucher களை பரிசீலினை செய்வோம். ஆனால் அதை தாக்கல் செய்யமாட்டோம். வருமான வரி விவரங்கள் வருமான வரி அதிகாரியால் சரிபார்க்கப்படும். சந்தேகங்கள் இருந்தால் அழைப்பார்கள். அப்போது ஆவணங்களை காண்பிப்போம். இல்லையென்றால் வருமான வரி விவரங்கள் அப்படியே ஏற்றுக்கொள்ளப்படும்.

**குறுக்கு விசாரணை**

1,2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் அஜராகியிருந்து குறுக்கு விசாரணை செய்யவில்லை.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.06.04 17:36:15 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.